ஓசூர் அரசு மருத்துவமனையில்

பிறந்து சில நாளே ஆன பச்சிளம் குழந்தை வீச்சு

பிரசவித்த தாய் ஓட்டம்

ஓசூர், மே.25–

வேலூர் மாவட்டத்தை சேர்ந்த 22வயதுஇளம்பெண் ஒருவர், ஓசூர் பகுதியில் வசித்து வரும் தனது உறவுக்கார பெண்ணுடன் கடந்த 14–ந் தேதி ஓசூர் அரசு மருத்துவமனையில் பிரவசத்திற்காக அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு கடந்த 16–ந் தேதி அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது. அந்த இளம்பெண்ணுக்கு திருமணமாகாத நிலையில் கடந்த 22–ந் தேதி தனது குழந்தையை அரசு மருத்துவமனை வார்டில் போட்டுவிட்டு அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். சித்தி என கூறிக்கொண்டு உடன் வந்த பெண்ணும் மாயமானார்.

கடந்த இரண்டு நாட்களாக பச்சிளம் குழந்தை வார்டில் இருந்த நிலையில் ஓசூர் காவல் நிலையத்திற்கு அரசு மருத்துவமனை சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

அதன் பேரில் நேற்று ஓசூர் டவுன் போலீசார் அரசு மருத்துவமனைக்கு சென்று தீவிர விசாரணை மேற்கொண்டனர். அந்த குழந்தை பச்சிளம் குழந்தைகள் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

குடிக்க பணம் தராததால்

பூச்சி மருந்து குடித்த விவசாயி சாவு

காரிமங்கலம், மே.25–

தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் அடுத்த பேகாரஅள்ளி பஞ்சாயத்துக்குட்பட்ட கிராமத்தை சேர்ந்தவர் பாப்பண்ணன் (வயது50) விவசாயி. இவர் மனைவி செலத்தா (45). பாப்பண்ணனுக்கு குடிப்பழக்கம் இருந்துள்ளது. இது தொடர்பாக 2 பேருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்படுவது வழக்கம்.

இதேபோல் கடந்த 2 நாட்களுக்கு முன்பு பாப்பண்ணன் மதுகுடிக்க பணம் கேட்டுள்ளார். அதற்கு செலத்தா மறுத்ததாக தெரிகிறது. இதனால் இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. இதில் மனமுடைந்த பாப்பண்ணன் வீட்டின் அருகே உள்ள தோட்டத்தில் பூச்சு மருந்து குடித்து மயங்கி கிடந்தார். இதனை பார்த்த குடும்பத்தினர் அவரை மீட்டு சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி பாப்பண்ணன் பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்து காரிமங்கலம் இன்ஸ்பெக்டர் வெங்கட்ராமன் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்.

பாப்பிரெட்டிப்பட்டி அருகே

உழவு எந்திரத்தில் சிக்கி சிறுவன் பலி

தருமபுரி, மே.25–

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள மாரியம்மன் கோவிலூரை சேர்ந்தவர் முத்து (வயது31). விவசாயி. இவருக்கு மனிஷா (9) என்ற மகளும் தேவஸ்ரீ (6) என்ற மகனும் உள்ளனர். தேவஸ்ரீ அங்குள்ள தொடக்க பள்ளியில் படித்து வந்துள்ளான்.

இந்த நிலையில் நேற்று காலை அருகில் உள்ள வெங்கடாசலம் என்பவரது விவசாய நிலத்தில் பழனி (46) என்ற டிரைவர் டிராக்டரில் உழுது கொண்டிருந்தார்.

அப்போது முத்துவின் மகன் தேவஸ்ரீ டிராக்டரில் உட்கார்ந்து சென்றுள்ளான். அப்போது நிலை தடுமாறி கீழே விழுந்ததில் டிராக்டரில் இணைக்கப்பட்டிருந்த உளவு எந்திரத்தில் சிக்கி தேவஸ்ரீ சம்பவ இடத்திலேயே உயிரிழந்தான்.

இது குறித்து தகவல் அறிந்த பொம்மிடி போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று சிறுவனின் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கொள்ளை நடந்த கடையில் கண்காணிப்பு கேமராவில் சிக்கிய மர்ம டவுசர் கொள்ளையனை படத்தில் காணலாம்.

தருமபுரியில் நள்ளிரவில் துணிகரம்:

7 கடைகளின் மேற்கூரையை உடைத்து கொள்ளை

கேமராவில் சிக்கிய மர்ம ஆசாமி -போலீசார் விசாரணை

தருமபுரி,மே.25–

தருமபுரி–கிருஷ்ணகிரி சாலையில் தனியார் பாலிடெக்னிக் கல்லூரி ஒன்று இயங்கி வந்தது. தற்போது அந்த கல்லூரி வேறு இடத்திற்கு இடம் மாற்றம் செய்யப்பட்ட பிறகு அந்த இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் மேற்கூரை அமைத்து வணிக வளாகமாக மாற்றி உள்ளனர். இங்கு 11 கடைகள் இயங்கி வருகின்றன.

நேற்று இரவு இந்த வளாகத்தில் கொள்ளையர்கள் கைவரிசை காட்டியுள்ளனர். வரிசையாக கடைகளின் மேற்கூரைகள் உடைக்கப்பட்டு பொருட்கள் சிதறிக்கிடந்தது. இதனை கண்டு அவ்வழியாக சென்றவர்கள் போலீசாருக்குதகவல்தெரிவித்தனர்.

பறிமுதல் செய்யப்பட்ட ரேசன் அரிசியை படத்தில் காணலாம்.

தருமபுரி அருகே

1,100 கிலோ ரேஷன் அரிசி கடத்திய வாலிபர் கைது

தருமபுரி, மே. 25–

தருமபுரிகுடிமைபொருள் வழங்கல் பிரிவு டி.எஸ்.பி. விஜயகுமார் உத்தரவின் பேரில் இன்ஸ்பெக்டர் விவேகானந்தன் தலைமையில் சப்–இன்ஸ்பெக்டர் செந்தில் முருகன், எஸ்.எஸ்.ஐ.ராமச்சந்திரன், தலைமை காவலர்கள் செந்தில்குமார், வேணுகோபால் ஆகியோர் தருமபுரி– கிருஷ்ணகிரி மெயின் ரோட்டில் குண்டல்பட்டி அருகில் அதன்பேரில் தருமபுரி போலீஸ் டி.ஸ்.பி. வினோத், இன்ஸ்பெக்டர் நவாஸ் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பார்வையிட்டனர்.

இந்த துணிகர கொள்ளை குறித்து கடை உரிமையாளர்களுக்கு தகவல்தெரிவிக்கப்பட்டது. அவர்களும் விரைந்து வந்தனர். கடைகளை திறந்து பார்த்தபோது சாதிக்பாட்சா, வேலு, மாது, சிங்காரவேலன், இம்ரான்,செந்தில்,சந்துரு ஆகியோரின் கடைகளில் இருந்து சுமார் ரூ.3 லட்சம் ரொக்கப்பணம் திருடப்பட்டுள்ளது.

இந்த வளாகத்தில் உள்ள கண்காணிப்பு கேமராவில் டவுசர், பனியன் அணிந்த ஒரு ஆசாமியின் உருவம் பதிவாகியுள்ளது. இதை வைத்து மர்ம நபரை பிடிக்க போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வணிக வளாகத்தில் குறிப்பிட்ட சில கடைகளை குறிவைத்து அடிக்கடி கொள்ளை நடந்து வருகிறது. மேலும் சில கடைகளில் பூட்டு உடைக்கபட்டு இருந்தது.

மேலும் மேற்கூரையில் பால்சீலிங் அமைக்கப்பட்டுள்ள கடைகளில் மட்டுமே கொள்ளை நடந்துள்ளது. இதனால் இப்பகுதி பற்றி நன்கு அறிந்த ஆசாமிகள்தான் இந்த சம்பவத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஓகேனக்கல் காவிரி ஆற்றில்

இறந்து கிடந்த ஆண் யார்?

போலீசார் விசாரணை

தருமபுரி, மே.25–

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் மெயின் அருவி அருகே செல்லும் வழியில் சுமார் 50 வயது மதிக்க தக்க ஆண் ஒருவர் சடலம் மிதந்தது. இதனை பார்த்த அந்த பகுதிக்கு சென்றவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இது குறித்து ஒகேனக்கல் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

தொழிலாளியின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பென்னாகரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக போலீசார் வழக்குபதிவு செய்து இறந்து கிடந்தவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? என்பது குறித்து தெரியவில்லை. அவர் ஆற்றில் தவறி விழுந்தாரா? அல்லது தற்கொலை செய்தாரா? என்பது குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இண்டூர் அருகே

பிளஸ்-2 மாணவி கடத்தல்

வாலிபர் மீது புகார்

நல்லம்பள்ளி, மே.25–

தருமபுரி மாவட்டம், இண்டூர் அருகே உள்ள கும்பளப்பாடி கிராமத்தை சேர்ந்தவர் பிரபு. இவர் கல்குவாரியில் வேலை செய்து வருகிறார். இவரது மகள் அருணா (வயது17) . இவர் பண்டஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்–2 படித்து வந்தார். தற்போது இவருக்கு பொது தேர்வு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கடந்த 23–ந் தேதி கடைசி தேர்வு எழுத சென்றவர் மீண்டும் வீட்டுக்கு வரவில்லை. இதனால் அவரை உறவினர் வீடு உள்பட பல்வேறு இடங்களில் தேடி பார்த்தும் கிடைக்கவில்லை.

இது குறித்து மாணவியின் பெற்றோர் இண்டூர் போலீசில் எனது மகளை இதே பகுதியை சேர்ந்த 23 வயது வாலிபர் ஒருவர் கடத்தி சென்றதாக புகார் கொடுத்ததாக கூறப்படுகிறது. அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து காணாமல் போன மாணவி குறித்து விசாரணை செய்தனர்.

ஓசூர் தனியார் நிதி நிறுவனத்தில்

ரூ .36 லட்சம் பணம், ஆவணங்கள் பறிமுதல்

பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் அதிரடி

ஓசூர், மே. 25–

ஆருத்ரா கோல்டு என்ற பெயரில் தனியார் நிதி நிறுவனம் சென்னை உள்பட பல்வேறு இடங்களில் செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரிலும் இதன் கிளை, ஓசூர்–பாகலூர் சாலையில் செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனம்.அதிக வட்டிதருவதாகஆசைகாட்டி, பொதுமக்களிடமிருந்து பணம் வசூலித்து வந்ததாக புகார்கள் எழுந்ததையடுத்து , நேற்று சென்னையில் உள்ள தலைமை அலுவலகம் உள்பட அதன் 10–க்கும் மேற்பட்ட கிளைகளில் பொருளாதார குற்றப்பிரிவு போலீசார் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

ஓசூரில், 4 மாதங்களாக செயல்படும் இந்த நிறுவனத்தின் கிளையில், இரட்டிப்பு பணம் கிடைக்கும் என்கிற ஆசையில் இதுவரை 700 பேர் வரை 1 லட்சம் ரூபாய் முதல் 10 லட்சம் ரூபாய் வரை முதலீடு செய்துள்ளதாக தெரிகிறது.

ஒட்டுமொத்தமாக 14 கோடி ரூபாய்க்கும் அதிகமாக முதலீடு செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், ஓசூரில் உள்ள கிளை அலுவலகத்தில், ஈரோடு பொருளாதார குற்றப்பிரிவு துணை போலீஸ்சூப்பிரண்டு ரகுபதி தலைமையிலான 10 போலீசார், ஓசூர் தாசில்தார், வருவாய்த்துறை அதிகாரிகள் மற்றும் சைபர்கிரைம் போலீசார்,காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை மேற்கொண்ட சோதனையில் 36 லட்சம் ரூபாய் ரொக்கப்பணம், 4 கணினிகள்,2 ஹார்டு டிஸ்க், பிரிண்டர்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

காரிமங்கலத்தில்

ரூ.50 லட்சத்துக்கு கால்நடைகள் விற்பனை

காரிமங்கலம், மே.25–

தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் நடந்த கால்நடைகள் வாரச்சந்தையில், 50 லட்சம் ரூபாய் அளவுக்கு கால்நடைகள் விற்பனையாகின.

தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் கால்நடை வாரச்சந்தை அமைந்துள்ளது. இந்த சந்தைக்கு சேலம், கிருஷ்ணகிரி,திருப்பத்தூர், நாமக்கல், வேலூர், திருவண்ணாமலை, கரூர் உள்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கால்நடைகளை வாங்க வருவார்கள். இதனால் அன்றைய தினம் திருவிழா கூட்டம் போல் காரிமங்கலம் வாரசந்தை கலைகட்டும்.

இந்த நிலையில் நேற்று வாரச்சந்தை வழக்கம் போல் இயங்கியது. வெளி மாவட்டங்களில் இருந்து ஏராளமானோர் கால்நடைகளை வாங்க வந்து இருந்தனர்.

மேலும் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் 450 மாடுகள், 37 லட்சம் ரூபாய்க்கும், 600 ஆடுகள், 12 லட்சம் ரூபாய்க்கும் என மொத்தம், 50 லட்சம் ரூபாய்க்கு கால்நடைகள் விற்பனையாகின.

கட்டி முடித்து ஓராண்டே ஆன நிலையில்

சட்டக்கல்லூரி வளாகத்தில் உடைந்து விழும் பிளைவுட் மேற்கூரை

உள்ளே நுழைய மாணவ,மாணவிகள் அச்சம்

தருமபுரி,மே.25 –

தருமபுரி மாவட்டம் கடந்த காலங்களில் தமிழகத்திலேயே கல்வி வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டமாக இருந்து வந்தது. உயர் கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் சதவீகிதம் மிக மிக குறைவாக தான் இருந்தது.

ஆகையால் தமிழக அரசு தருமபுரி மாவட்டத்திற்கு மருத்துவ கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்ட கல்லூரி, பால்டெக்னிக் கல்லூரி, கலை மற்றும் அறிவியியல் கல்லூரி என அனைத்து தரப்பட்ட கல்லூரிகளும் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் தருமபுரி மாவட்டத்திற்கு கடந்த 25.05.2017 ம் ஆண்டு சட்ட கல்லூரி தொடங்கப்படும் என அ,தி,மு,க தலைமையிலான அரசு அறிவித்தது. இக்கல்லூரி டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலை கழகத்துடன் இணைந்து செயல்படும் எனவும் அறிவிக்கபட்டது.

இந்நிலையில் தருமபுரி மாவட்டம் காரிமங்கலம் அடுத்த பைசுஅள்ளி பகுதியில் விடுதியுடன் கூடிய 7.75 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 69 கோடியே 29 லட்சம் மதிப்பில் கட்டிடங்கள் கட்டி கடந்த ஆண்டு முதல் வகுப்புகள் துவங்கபட்டது. இக்கல்லூரியில் 1500 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.

இந்நிலையில் கட்டி முடிக்கபட்டு ஓர் ஆண்டு நிறைவுற்ற நிலையில், மாவட்டத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த கன மழை மற்றும் சூறாவளி காற்றுக்கு கல்லூரி நுழைவு வாயிலில் உள்ள பிளைவுட் மேற்கூரை அனைத்தும் பெயர்ந்து விழுந்து வருகிறது. இதனால் சட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளே நுழையவே அச்சப்படுகின்றனர்.

இந்நிலையில் பெரிய அளவில் விபத்து ஏற்படுவதற்கு முன் தமிழக அரசு சட்ட கல்லூரியை தரமில்லாமல் கட்டிய ஒப்பந்ததாரர் மீது உரிய நடவடிக்கை எடுத்து மீண்டும் புதுப்பித்து தர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு / சீர்காழி நகராட்சி
ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு

ந.க.எண்: 1082/2022/இ1 கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT)–2021–22 நாள் : 20.05.2022

சீர்காழி நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் (KNMT)–2021–22–ன் கீழ் நீர்நிலைகள் மேம்பாட்டு செய்யும் பணி மேற்கொள்ள சீர்காழி நகராட்சி ஆணையர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளி (இரண்டு உறைகள் முறை) வரவேற்கப்படுகின்றன.

1. பணியின் மொத்த மதிப்பு

வ.எண்	பணியின் பெயர்	திட்டமதிப்பீடு (ஜிஎஸ்டி தவிர) ரூ	முன் வைப்பு தொகை ரூ
1.	நகராட்சி வார்டு A பிளாக் எண் 43 நகர அளவை எண் 40 காந்தி பார்க் கரிகுளம் மேம்பாடு செய்யும் பணி	80.00	80,000/-
	நகராட்சி வார்டு C பிளாக் எண் 16 நகர அளவை எண் 23 கோவில்பத்து காமராஜனுளம் மேம்பாடு செய்யும் பணி	56.32	56,320/-
	நகராட்சி வார்டு B பிளாக் எண் 16 நகர அளவை எண் 107 டி.டி பிள்ளைக் குளம்மேம்பாடு செய்யும் பணி	118.00	1,18,000/-

2. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களும் பெறலாம்.
3. பொதுவான நேரம் மற்றும் நாள்
அ) ஒப்பந்தப்புள்ளிக்கு முன் கலந்தாய்வுக்கூட்டம் : 27.05.2022 காலை 11.00 மணி
ஆ) ஒப்பந்த நமூனா இறக்கம் செய்தல் : 24.05.2022 முதல் 31.05.2022 மாலை 3.00 மணி வரை
இ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 31.05.2022 மாலை 3.00 மணி வரை
ஈ) தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : 31.05.2022 மாலை 3.30 மணி
4. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்படின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு திறக்கப்படும். ஏதேனும் திருத்தங்கள்/ மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிடப்பட்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

ஆணையாளர் (மு.கூ.பொ) சீர்காழி நகராட்சி

DIPR/2481/Tender/2022 'சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்'

TANEJA AEROSPACE AND AVIATION LIMITED
Regd. Office : Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India
Phone : 04347-233508 | Fax : 04347-233414, | E-mail : secretarial@taal.co.in, Website : www.taal.co.in | CIN : L62200TZ1988PLC014460

EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDTED FINANCIAL RESULTS FOR THE PERIOD ENDED MARCH 31, 2022

(Rs. in Lacs, except earnings per share)

Sr. No	Particulars	Quarter ended 31-Mar-22	Quarter ended 31-Mar-21	Year ended 31-Mar-22	Year ended 31-Mar-21
1	Total Income from operations (Net)	791.83	979.41	3,198.58	3,481.50
2	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items)	296.46	202.10	1,281.66	826.79
3	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary Items)	208.12	202.10	805.43	826.79
4	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items)	59.60	101.16	546.67	621.85
5	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	44.41	99.43	531.48	620.12
6	Equity share capital	1,246.54	1,246.54	1,246.54	1,246.54
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year	-	-	9,616.90	9,210.06
8	Earnings Per Share (of Rs.5/- each) (not annualised):				
	(a) Basic earnings / (loss) per share	0.24	0.41	2.19	2.49
	(b) Diluted earnings / (loss) per share	0.24	0.41	2.19	2.49

Notes :
1. Additional information on standalone financial results is as follows:

Particulars	Quarter ended 31-Mar-22	Quarter ended 31-Mar-21	Year ended 31-Mar-22	Year ended 31-Mar-21
Revenue from Operations	773.47	960.83	3,119.72	3,452.01
Profit / (Loss) before tax	208.24	203.01	805.65	827.69
Profit / (Loss) after tax	59.72	102.07	546.89	622.75

2 The above is an extract of the detailed format of Standalone and Consolidated Financial Results for the quarter and year ended March 31, 2022 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Stanalone and Consolidated Financial Results are available on the Stock Exchange website (www.bseindia.com) and also on the Company's website (www.taal.co.in).
3 This statement has been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on May 23, 2022.

For Taneja Aerospace and Aviation Limited
Rakesh Duda
Managing Director

Place : Delhi
Date : 23.05.2022

சேலம் மாவட்ட SSJ-II நீதிமன்ற கோர்ட்டாரவர்கள் சமூகம்.
MCOP. NO.184/2021
மஞ்சுநாதன், த/பெ. லட்சுமணன், க.எண். 323, 1–வது வார்டு, கூட்டாத்துப்பட்டி வழி, அனுப்பூர் அஞ்சல், வாழப்பாடி தாலுக்கா, சேலம் (மா). –மனுதாரர்
–எதிராக–
வினோத்குமார், த/பெ. காலிமுத்து, 38/2, 527/B5, மாணிக்கவாசகர் தெரு, எம்.ஜி.ஆர். நகர், மூக்கண்டப் ஓசூர்–636126. செல்: 97911 34383. –எதிர்மனுதாரர்

அறிவிப்பு
மனுதாரர் கடந்த 21–10–2018ம் தேதியில் மோட்டார் வாகன விபத்தில் அடிபட்டதற்கு நஷ்ட ஈடு கோரி எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு மனு நம்பர் MCOP. NO.184/2021 கனம் கோர்ட்டில் 14.06.2022–ந் தேதிக்கு வாய்தாவாக உள்ளது. ஆகவே எதிர்மனுதாரர் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம். இல்லையேல் ஒரு தலைபட்ச தீர்ப்பு ஏற்படும் என்பதை அறியவும்.
(நீதிமன்ற உத்தரவுபடி)
R.VELMURUGAN, B.A.B.L., Advocate, Rasipuram.

காணவில்லை
நான் கீழ்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது பெயரில் உள்ள ஆவண எண்.932/1937, கொண்ட பத்திரம், சின்னகடமடை கிராமத்திற்கு செல்லும் போது 24–11–2021 அன்று பத்திரம் தொலைந்து விட்டது. இது தொடர்பாக 24/05/2022 அன்று காவல்துறையில் ஆன்லைன் புகார் செய்யப்பட்டுள்ளது. **(புகார் எண்.LDR No: ID587202200196)** மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் தகவல் தெரிவிக்கவும்.
RAJA, Mariyamman Kovil Street, Sunjalantham Village, Eriyur Post, Pennagaram Taluk, Dharmapuri (Dt).
Cell:9003972071

காணவில்லை
நான் கீழ்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது பெயரில் உள்ள ஆவண எண்.4108/2013, கொண்ட பத்திரம், சின்னம்பள்ளி கிராம பேங்க் அருகே செல்லும் போது 07–08–2021 அன்று பத்திரம் தொலைந்து விட்டது. இது தொடர்பாக 04/05/2022 அன்று காவல்துறையில் ஆன்லைன் புகார் செய்யப்பட்டுள்ளது. **(புகார் எண்.LDR No: ID587202200175)** மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் தகவல் தெரிவிக்கவும்.
SUBIRAMANI, Chinnapangunatham, Pangunatham, Nallampalli (TK), Dharmapuri (Dt), **Cell:9003972071**

காணவில்லை
நான் கீழ்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது பெயரில் உள்ள ஆவண எண்.299/2005, கொண்ட பத்திரம், சின்னகடமடை கிராமத்திற்கு செல்லும் போது 24–11–2021 அன்று பத்திரம் தொலைந்து விட்டது. இது தொடர்பாக 24/05/2022 அன்று காவல்துறையில் ஆன்லைன் புகார் செய்யப்பட்டுள்ளது. **(புகார் எண்.LDR No: ID587202200197)** மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரியில் தகவல் தெரிவிக்கவும்.
RAJA, Mariyamman Kovil Street, Sunjalantham Village, Eriyur Post, Pennagaram Taluk, Dharmapuri (Dt).
Cell:9003972071

காணவில்லை
கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிகோட்டை வட்டம் நாகமங்கலம் ஊராட்சி 4/44 நீலகிரி கிராமத்தை சேர்ந்த லேட் ரங்கப்பா குமாரர் சந்திரப்பா இவருக்கு பாத்தியப்பட்ட விவசாய நிலப்பத்திரம் இராயக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண்: 391/1984 நீலகிரி கிராம சர்வே எண்கள்: 173/1, பரப்பு 0.73 செண்ட், 173/2 பரப்பு 0.02 செண்ட் மொத்த பரப்பு 0.75 செண்ட் நிலம் உள்ள நிலப்பத்திரம் காணாமல் போய்விட்டது. இது தொடர்பாக தமிழ்நாடு காவல்துறை ஆன்லைன் புகார் எண்: LDR No.ID922202200322 நாள், 24.05.2022ன்படி புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தகவல் தெரிவிப்பவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புக்கு செல்: **No.9342803178**

கனம் கோட்டாட்சியர் அவர்கள் அரூர்
ந.க.எண் 2188/2022/அ1
திருமதி. அமிர்தம்
க/பெ குப்புசாமி
வீரப்பநாயக்கன்பட்டி கிராமம்
அரூர் (வட்டம்)
தருமபுரி (மாவட்டம்)
– மனுதாரர்
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது கணவர் குப்புசாமி என்பவர் மேற்படி முகவரியில் 26.12.1998 தேதி அன்று இறந்தார். இந்த இறப்பு குறித்து பதிவு செய்ய தவறிவிட்டதால் பிறப்பை பதிவு செய்ய கோரி அரூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி தேதியில் மனுதாரரின் கணவர் குப்புசாமி என்பவருக்கு இறப்பு சான்று வழங்க எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் அரூர் கோட்டாட்சியரிடம் 15 நாட்களுக்குள் ஆட்சேபணை தெரிவித்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. 15 நாட்களுக்குள் ஆட்சேபனை செய்ய தவறினால் மேற்படி குப்புசாமி என்பவருக்கு இறப்பு சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது
மனுதாரர்–அமிர்தம்

கனம் கோட்டாட்சியர் அவர்கள் அரூர்
ந.க.எண் 1984/2021/அ1
திரு. மாதையன்
த/பெ வெங்கட்ராமன்
க.எண்.115 வள்ளுவர் தெரு
பில்பருத்தி கிராமம்
பாப்பிரெட்டிப்பட்டி (வட்டம்)
தருமபுரி (மாவட்டம்)
– மனுதாரர்
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தந்தை வெங்கட்ராமன் என்பவர் மேற்படி முகவரியில் 10.12.2002 தேதி அன்று இறந்தார். இந்த இறப்பு குறித்து பதிவு செய்ய தவறிவிட்டதால் இறப்பைப் பதிவு செய்ய கோரி அரூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி தேதியில் மனுதாரரின் தந்தை வெங்கட்ராமன் என்பவருக்கு இறப்புச் சான்று வழங்க எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் அரூர் கோட்டாட்சியரிடம் 15 நாட்களுக்குள் ஆட்சேபணை தெரிவித்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. 15 நாட்களுக்குள் ஆட்சேபனை செய்ய தவறினால் மேற்படி வெங்கட்ராமன் என்பவருக்கு இறப்புச் சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
மனுதாரர்–மாதையன்

கனம் கோட்டாட்சியர் அவர்கள் அரூர்
ந.க.எண் 2383/2022/அ1
திரு. சண்முகம்
த/பெ தீர்த்தகிரி
கௌபாறை கிராமம்
எல்லைப்புடையாம்பட்டி தரப்பு
அரூர் (வட்டம்)
தருமபுரி (மாவட்டம்)
– மனுதாரர்
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தந்தை தீர்த்தகிரி என்பவர் மேற்படி முகவரியில் 10.07.2002 தேதி அன்று இறந்தார். இந்த இறப்பு குறித்து பதிவு செய்ய தவறி விட்டதால் இறப்பைப் பதிவு செய்ய கோரி அரூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி தேதியில் மனுதாரரின் தந்தை தீர்த்தகிரி என்பவருக்கு இறப்புச் சான்று வழங்க எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் அரூர் கோட்டாட்சியரிடம் 15 நாட்களுக்குள் ஆட்சேபணை தெரிவித்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. 15 நாட்களுக்குள் ஆட்சேபனை செய்ய தவறினால் மேற்படி தீர்த்தகிரி என்பவருக்கு இறப்புச் சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
மனுதாரர்–சண்முகம்

கனம் கோட்டாட்சியர் அவர்கள் அரூர்
ந.க.எண் 2323/2022/அ1
திரு. பச்சையப்பன்
த/பெ ஜடையன்
கணபதிபட்டி கிராமம்
கீல்மொரப்பூர் தரப்பு
அரூர் (வட்டம்)
தருமபுரி (மாவட்டம்)
– மனுதாரர்
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி மனுதாரர் தனது தாத்தா சின்னப்பகவுண்டர் என்பவர் மேற்படி முகவரியில் 02.04.1